Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.17/2021 Date:19.08.2026
Deposition of witness for prosecution: PW7 ( LW11 )
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. முத்துசெல்வன் | Village | மதுரை |
| Father/ Husband Name | கருப்பசாமி | Taluk | மதுரை |
| Age | 33 /2026 | Calling | சார்பு ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 19.08.2026. TIME 04.25 PM

எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது மதுரை சிறப்பு நுண்ணறிவு பிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.11.2020-ம் தேதி 20.15 மணிக்கு சின்னமனூர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளர் பணியில் இருந்தபோது, சின்னமனூர் அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று சிகிச்சையில் இருந்த நாச்சிமுத்து மகன் குருசாமி பேசஇயலாத சூழலில் இருந்ததால், அவரது தம்பி சிவக்குமார் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். பின்னர் 21.30 மணிக்கு நிலையம் வந்து அதன் தன்மைக்கேற்ப எதிரி மீது இ.த.ச. பிரிவு 279, 337 இதச கீழ் குற்ற எண் 2181/2020 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். பின்னர் அசல் ஆவணங்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் அன்றைய தினமே 22.45 மணியளவில் சம்பவ இடமான சின்னமனூர் - சீலையம்பட்டி பிரத்தியங்காராதேவி கோவில் அருகில் சென்று சாட்சிகள் கண்ணன், சுருளிசாமி ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தேன். பின்னர் சாட்சிகள் சிவக்குமார், முருகன், சூரியா, கண்ணன், சுருளிசாமி ஆகியோரை தனிதனியே விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட குருசாமி என்பவர் 29.11.2020-ம் தேதி அதிகாலை 01.45 தேனி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனிற்றி இறந்துவிட்டார் என்று கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் காலை 06.00 மணிக்கு மேற்படி வழக்கின் சட்டப்பிரிவுகளை இதச 279, 337-ல் இருந்து இதச 279, 304(A) இதசவாக மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். மேலும் வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3,** பார்வை மகஜர் **அ.சா.ஆ.4,** வரைபடம் **அ.சா.ஆ.5**, சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.6,** விபத்து பதிவேடு **அசா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

புகார்தாரர் சிவக்குமார் சம்பவ இடத்தில் இருந்தாரா என்றால் எனது விசாரணையின் போது இருந்ததாக சொன்னார். எதிரி மற்றும் எதிரியுடன் வந்த சிவசங்கர் என்பவர்களுக்கு ஏற்பட்ட காயத்தை பற்றி புகார் வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு சென்ற போது, எதிரி மற்றும் எதிரியுடன் வந்த நபர் மருத்துவமனையில் இருந்தார்களா என்றால் இருந்ததாக தற்போது ஞாபகமில்லை. நான் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் தவறுதலான வாக்குமூலம் பெற்று, தவறாக வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சரிவர விசாரணை செய்யவில்லை என்பதால் தான் எதிரி மற்றும் சிவசங்கர் ஆகியோருக்கு ஏற்பட்ட காயங்கள் மீது, குருசாமி என்பவர் மீது வழக்கு பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.